## 5. வழமையான பள்ளிக் கல்வியுடனான ஒத்துழைப்பும் பரிமாறல்களும்

பா.மொ.க வுக்கும் வழமையான பாடத்திட்டக் கற்பித்தலுக்கு இடையே உணர்வூட்டும் ஒருங்கிணைப்பு, பட்டறிவுகளின் பரிமாற்றங்கள், கண்டுபிடிப்புகள் மற்றும் நடைமுறைகள் உட்பட்ட அணுகுமுறை எவ்வளவு மதிப்பு மிக்கது என்பது அடித்தளத் தொகுதியிலும் ஏனைய கற்பித்தல் பணிநூல்களிலும் திரும்பத் திரும்பச் சுட்டிக் காட்டப்பட்டது. வாய்மொழி ஊக்குவிப்புப் பின்னணியில் பின்வரும் பகுதிகள் சிறப்பு ஈடுபாடுடையனவாகலாம்:

- பேச்சுக்கல்வி தலைப்புப் பற்றிய பரிமாற்றங்கள்: வெவ்வேறு ஆசிரியர்கள் எவ் உரையாடல் விதிகளைப் பயன்படுத்தலாம்? இவ்விதிகளை எவ்வாறு செயல்படுத்தலாம்? அவற்றை எவ்வாறு பயிற்சி செய்யலாம்?

- சனநாயக முறையில் கலந்துரையாடற் கல்விச் சூழலில் நெறிமுறை வடிவங்களின் பரிமாற்றங்கள்:
  எவ் வடிவங்கள் (எ.கா. வகுப்பு பேரவை, சார்ந்து / சாரா கலந்துரையாடல்கள், முதலியன) பயிற்சி செய்யப்படுகின்றன? எவ் வடிவங்கள் முற்கற்பிதமாகக் கருதப்படவேண்டும்?

- காட்சி நாடகப் பரப்பில் (பள்ளி நாடகத்தின் சிறிய வடிவங்கள், முதலியன) பணிசெய்தற்கும், கவிதைகள் வேறு எழுத்துருக்களின் புலப்பாட்டு விளக்கத்துக்கும் கருத்துகள் மற்றும் கருவிகள் பரிமாற்றம்.

- வழமையான பாடத்திட்டப் பள்ளிகளின் பேச்சுக் கல்விக் கருத்துகள் கருவிகள் அவை பற்றிய விளக்கவுரைகள் ஆகியவற்றுக்கு அறிமுகமாதல். கண்காணிப்பு, கணிப்பீட்டுத் தாள்கள் போன்றவையும் ஆவணப் படுத்தப்பட்டவையும் பயன்படலாம். அவை பா.மொ.க வுக்கும் பயன்படுத்தலாம்.

வாய்வழி வெளிப்பாட்டுக்கு அழுத்தம் கொடுத்து, பெருநிலைக் கல்விக்கும் பா.மொ.க வுக்கும் இடையே அமையும் கூட்டுறவுக் கருத்திட்டம் என்ற வகையில் பின்வரும் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. அவை வழமையான பாடத்திட்டக் கல்விச் சட்டகத்துள் அல்லது ஒரு கருத்திட்டக் கிழமைச் சூழலில் அமையலாம்.

- பல்வேறு மொழிகளிலிருந்து கவிதைகள் பற்றிய விரிவுரைத் தொடரின் ஒரு பொது எண்ணக்கரு. எ.கா. பெற்றோர் நிகழ்வின் இறுதியில் பன்மொழிக் கவிதை இறுவட்டின் ஒலிப்பதிவு.

- மேல் உள்ளவாறு, ஆனால் பல மொழிகளில் மொழி விளையாட்டுகள். கற்பித்தல் மதியுரை # 7 ஐயும் பார்க்கவும்.

- மேல் உள்ளவாறு, ஆனால் ஒரு நாடகத்திலிருந்து சிறிய காட்சிகள் அல்லது பல மொழிகளிலிருந்து படவரைபுகள் காணொளிப் பதிவாக.

- மேலும், சிறிய பன்மொழி விளையாட்டுகளுக்கும் வேறு செயற்பாடுகளுக்குமான பல்வகை எண்ணக்கருக்களை "Sprachen vielfalt als Chance" (linguistic diversity as an opportunity, Schader, 2013) என்பதில் பார்க்கவும்.

இந்த அறிமுகப் பகுதிக்கு அவர்களுடைய மதிப்பார்ந்த பங்களிப்புகளுக்காக, ஸ்ரீபன் ஹஸ்லர், நதினி நெல்டூர் மற்றும் கிளவுடியா உல்பிறிக் ஆகியோருக்கு நான் நன்றி கூறுகிறேன்.